Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# சிலப்பதிகாரத்தில் இசை

**ஹம்ஸவதி ஜெகதீஸ்வரன்**
**போதனாசிரியர், வாத்திய இசைத்துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.**
j.hamsavathy92@gmail.com

43

***ஆய்வு நோக்கம்***

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இசை பற்றி காணப்படுகின்ற செய்திகளை தொகுத்து நோக்குவதாக இவ் ஆய்வின் நோக்கம் அமைகின்றது.

***ஆய்வுச் சுருக்கம்***

"சிலப்பதிகாரத்தில் இசை" என்ற இந்த ஆய்வில் சிலப்பதிகார நூலில் காணப்படுகின்ற இசை பற்றி ஆராயப்பட்டுள்ளது. இளங்கோவடிகளால் எழுதப்பட்ட சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றாகும். இதில் இசை ஆசான், யாழ் வாசிப்பவர், தண்ணுமைக் கருவியாளர் இவர்களைப் பற்றிய இலக்கணம் பற்றியும் அடிப்படைப் பாலை மற்றும் பண்களைப் பெறும் முறை பற்றியும் யாழ் மற்றும் அதன் வகைகள் மற்றும் யாழின் பாகங்கள் பற்றிய விளக்கம் மற்றும் அதன் அமைப்பு, வாசிக்கும் முறை போன்றன குறிப்பிடப்பட்டுள்ளன. இவ்வாறான இசை செய்திகளை ஆராய்வதாக இக் கட்டுரை அமைகின்றது.

***திறவுச் சொற்கள்***

பண், பாலை, இசைக்கருவிகள், யாழ்

***அறிமுகம்***

சங்ககாலத்திலும் அதற்கு முன்பும் விளங்கிய இசை இலக்கண நூல்களில் கூறப்பட்ட இசை இலக்கணம் அனைத்தும் நிறைந்த ஒரு இசைச் சுரங்கமாக விளங்குவது சிலப்பதிகாரம் ஆகும். தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களிலே தலையாயதாக சிலப்பதிகாரம் விளங்குவதால் இது முத்தமிழ் காப்பியம் என்று அழைக்கப்படுகின்றது.

சிலப்பதிகாரம் என்ற சொல்லில் இரு வார்த்தைகள் அடங்கியுள்ளன. சிலம்பு என்பது காலில் அணியும் சிலம்பு என்ற அணிகலனையும் அதிகாரம் என்பது காப்பியத்தின் பகுதிகளையும் குறிக்கின்றன. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள ஒரு சிறந்த காப்பியமாக சிலப்பதிகாரம் விளங்குகின்றது. இந்நூல் புகார் காண்டம், மதுரைக்காண்டம்,

வஞ்சிக்காண்டம் என்ற மூன்று பெரும் பிரிவுகளில் முப்பது அதிகாரங்களை அதாவது காதைகளைக் கொண்டுள்ளது. இந்த முப்பது காதைகளில் ஏறத்தாழ பதினைந்து காதைகள் இசை மற்றும் இசைக் கருவிகள் பற்றிய செய்திகளைத் தெரிவிக்கின்றன. இதில் பல சாதாரண பாடல்கள் செவ்விசைப் பண்களிலும், நாட்டுப்புற மெட்டிலும் பாடும் வகையில் காணப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தில் பல்வேறு காதைகளில் இசை பற்றிய செய்திகள் காணப்பட்டாலும் அரங்கேற்று காதையில் இசை பற்றிய செய்திகள் மிக அதிகமாகக் காணப்படுகின்றன. மாதவி ஆடலிலும் பாடலிலும் சிறந்து விளங்கினாள் என்பதைக் குறிப்பிடும் சூழலில் இசையின் இலக்கணம் அரங்கேற்று காதையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிலப்பதிகாரம் இசை ஆசிரியரின் தகுதிகளைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

> “யாழும் குழலும் சீரு மிடறும்
> தாழ்குரல் தண்ணுமை ஆடலொடி வற்றின்
> இசைந்த பாடல் இசையுடன் படுத்து
> வரிக்க மாடர்க்கு உரிப்பொருளியக்கித்
> தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்து
> தேசிய திரவி னோசை யெல்லாம்
> ஆசின் றுணர்ந்த அறிவின னாகிக
> கவியது குறிப்பின் ஆடற் தொகுதியும்
> பகுதிப் பாடலும் கொளுத்துங் காலை
> வகையுறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
> அசையா மரபின் இசையோன் தானும்” (அரங்.26-36)

எனும் பாடல் வரிகளால் இசையாசிரியரின் தகுதியை இளங்கோவடிகள் சிறப்பித்துக் காட்டுகிறார்.சிலப்பதிகாரத்தில் காணப்படுகின்ற இசை பற்றிய செய்திகளை பின்வருமாறு வகுத்து நோக்கலாம்.

1. இசை ஆசான், யாழ் வாசிப்பவர், தண்ணுமைக் கருவியாளர் இவர்களைப் பற்றிய இலக்கணம்.
2. அடிப்படைப் பாலை மற்றும் பண்களைப் பெறும் முறை
3. யாழ் மற்றும் அதன் வகைகள் -யாழின் பாகங்கள் பற்றிய விளக்கம், அதன் அமைப்பு மற்றும் யாழை வாசிக்கும் முறை
4. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தண்ணுமைக் கருவிகள்
5. இதில் காணப்படும் பல இசை உரு வகைகள்
6. இசை தொடர்பான கலைச்சொற்கள்

மூன்றாவது காதையான அரங்கேற்றுக்காதையில் வரிகள் 12 முதல் 94 வரை இசை ஆசான், புலவன், தண்ணுமையாளன், குழலோன், யாழாசிரியன் முதலியவர்களின் தகுதிகள் இளங்கோவடிகளால் விவரிக்கப்பட்டுள்ளது.

***இசை ஆசிரியரின் இலக்கணம்***

இசை ஆசிரியனின் இலக்கணம் கூறுமிடத்து இசை ஆசானானவன் யாழ், குழல், தாளம் முதலியவற்றை வாசிக்கும் திறமை கொண்டவனாகவும், மிடற்றிசையின் ஓசை வெளிப்பாட்டின் முறைகள் தெரிந்தும், தண்ணுமையின் தாழ்ந்த ஓசைக்கு ஏற்ப இசைக்க வல்லவனாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு அனைத்து இசைக்கருவிகளிலும் தோன்றும் ஒலியினை ஒன்று சேர்த்து நடனத்திற்கும் பொருந்தும் படி அமைக்கும் திறமை படைத்தவனாக இருக்க வேண்டும். அத்துடன் தேசி இசையின் இசை கூறுபாடுகளை பிரித்துப் பார்க்கும் திறமை கொண்டவனாகவும் அவற்றினை நடனத்திற்கும் இசைக்கும் தகுந்தபடி பிரித்து அறியும் தன்மை கொண்டவனாகவும் இருத்தல் வேண்டும் என்றும் சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

***யாழாசிரியரின் அமைதி***

இதில் யாழின் வகைகளான பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ் ஆகியவையும், அவற்றின் நரம்புகளாக முறையே **21, 19, 14, 7** ஆகியவையும் கூறப்படுகின்றன. இந்த காதையில் 14 நரம்புகளைக் கொண்ட சகோடயாழில் தான் ஏழு பாலைகள் பிறக்கும் முறை விவரிக்கப்படுகிறது. இங்கு வம்புறு மரபு என்ற புதிய முறையானது கூறப்பட்டுள்ளது. இந்த முறைக்கு நேர்மாறான முறை அதாவது பழைய மரபுக்கு தொன்றுபடுமுறை என்று பெயர். இது 17வது காதையான ஆய்ச்சியர் குரவையில் கூறப்பட்டுள்ளது. இந்த மூன்றாவது காதையின் உரைச் செய்திகள் இசையின் சிறப்பைக் கூறுவதுடன் பாலை பண் முறையையும் விளக்குகிறது. மெலிவு, சமன், வலிவு ஆகிய மூன்று தானங்களில் இசையானது யாழில் இசைக்கப்பட்ட செய்தி பற்றியும் கூறப்படுகிறது.

***குழலாசிரியரின் அமைதி***

குழலாசிரியனின் அமைதி பற்றி கூறும் போது இவ் ஆசிரியன் எல்லா இலக்கணமும் அறிந்திருக்க வேண்டும். சித்திரை மற்றும் வஞ்சனை ஆகிய இரு புணர்ச்சிகள் அதாவது சேர்க்கைகளை அறிந்திருத்தல் வேண்டும். நான்கு வர்த்தனைகளையும் பாலை இசை இலக்கணம் அறிந்தும், முழவிசையை அனுசரித்து வாசிக்கத் தெரிந்தவனாகவும் இருத்தல் வேண்டும். இசையோன் பாடலைக் கேட்டு அதை விரிவாக்கும் திறமையும் அதே சமயம் தன் எல்லை மீறாமல் வாசிக்கத் தெரிந்தவனாகவும் இருத்தல் வேண்டும். வாசிக்கும் ஒவ்வொரு எழுத்தும் இசைச் செறிவுடன் தனித்தனியாகக் கேட்கும்படி வாசித்தல் வேண்டும்

***தண்ணுமை ஆசிரியரின் அமைதி***

இவர் இசை மற்றும் நடனத்தின் எல்லா உருக்களையும், இசை நரம்புகளைப் பற்றியும், தமிழ் மொழி பற்றிய அறிவும், இசை மற்றும் தாளம் பற்றியும் அறிந்திருத்தல் வேண்டும்.

***அடிப்படை பாலைகளும் பண்களும் பெறும் முறை***

பாலை என்பது ஏழு நரம்புகள் சேர்ந்த ஓர் அமைப்பு. இப் பாலைகளைப் பெற நான்கு முறைகள் கூறப்படுகின்றன. அவை முறையே ஆயம், சதுரம், திரிகோணம், வட்டம் ஆகியவை ஆகும். வட்டப் பாலையே ஏழ் பெரும் பாலைகள் பிறப்பிற்கு அடிப்படையாக அமைகின்றன. இடபத்தில் இழியும் கடகத்தில் விளரியும் சிம்மத்தில் தாரமும் துலாத்தில் குரலும் தனுசில் துத்தமும் கும்பத்தில் கைக்கிளையும் மீனத்தில் உழையும் நிற்கும். இதனை "இழி இடபம் கற்கடகமாம் விளரி சிங்கம்…." என்ற பாடல் மூலம் கூறப்படுகின்றது.

குரவைக் கூத்தாடிய எழுவரும் மேற்கு திசை முதலாக குரல் முதலிய ஏழு நரம்பால் இராசி வட்டத்தில் நிற்கும் தொன்முறையில் வட்டமாய் நின்றனர். இதனை ஆசிரியர் வட்டம் வரைந்து அதனை 12 பாகங்களாக பிரிந்து 12 ராசிகளிலும் குரல் முதலிய 7 நரம்புகள் நிற்கும்.

***ஏழு பாலை இசைகள்***

மேற்குறிப்பிட்ட வட்டப்பாலையினை ஆதரமாகக் கொண்டு குரல் திரிந்து ஏழு பாலைகள் பிறக்கின்றன. அவ் ஏழு பாலைகளும் அதற்குரிய தற்கால இணை ராகங்களும் நிறுவப்பட்டுள்ளன.

| பாலையின் பெயர் | தற்கால இணைராகம் |
|---|---|
| செம்பாலை | ஹரிகாம்போதி |
| படுமலைப்பாலை | நடபைரவி |
| செவ்வழிப்பாலை | --- |
| அரும்பாலை | சங்கராபரணம் |
| கோடிப்பாலை | கரஹரப்பிரியா |
| விளரிப்பாலை | தோடி |
| மேற்செம்பாலை | கல்யாணி |

***சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படும் பண்கள்***

பண் என்பதும் பாலை என்பதும் ஒன்றில் இருந்து ஒன்று மாறுபட்டதாகும். பண்ணப்படுவது பண் என்ற பொருளில் பண் என்பது குறிப்பிடப்படுகின்றது. ஏனெனில் எட்டு வகையான முறைகளில் பண்ணானது பண்ணப்படுகிறது. அவை எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பித்தல், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு முதலியவை ஆகும்.

பாலை என்பது ஏழு நரம்புகளையும் கொண்டிருக்கும். ஆனால் பண் **7, 6, 5** என்று நரம்புகள் கொண்டிருப்பதில் மாறுபட்டும் இருக்கும். ஏழு நரம்புகளைக் கொண்ட பண்ணானது தற்காலத்தில் சம்பூர்ணம் என்பதற்கு ஒப்பானதாகும். ஆறு நரம்புகளைக் கொண்ட பண்ணானது பண்ணியல் அதாவது ஔடவத்திற்கு நிகராகும். ஐந்து நரம்புகளைக் கொண்ட பண் திறம் எனப்படும். இது ஔடவத்திற்கு ஒப்பானதாகும். இவ்வாறு **103** பண்கள் சிலப்பதிகாரத்தின் உரையில் கூறப்படுகின்றது. இவை அகம், புறம், அருகு, பெருகு என்று வகைப்படுத்தப்படுகின்றன. சிலப்பதிகாரத்தில் காணப்படும் சில பண்களின் பெயர்கள் பின்வருமாறு

பாலைப்பண் (ஹரிகாம்போதிக்கு ஒப்பிடப்படுகின்றது)
குறிஞ்சி (குறிஞ்சி ராகம்)
மருதப் பண் (கல்யாணி)
கௌசிகம் ( பைரவி)
நோதிரம் (பௌளி)
ஆசான்திறம் (கேதாரகௌளை)
சீராகம் (ஸ்ரீராகம்)
ஆசாரி (கீரவாணி)
தோடி
காந்தாரம் (நவரோஜ்)
செந்துருத்தி (மத்தியமாவதி)

***சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இசைக்கருவிகள்***

இசைக்கருவிகள் மனிதனின் குரல் உட்பட்டு பகுக்கப்பட்டன. குரல் என்பது மிடற்றுக்கருவி என்றும் இசைக்கருவி என்பது குயிலுவக் கருவி என்றும் கூறப்பட்டுள்ளது. சிலம்பின் தலைவன் கோவலன் குழல் வாசிப்பதில் வல்லவனாகக் காணப்பட்டான். சிலப்பதிகாரத்தில் **108** இசைக்கருவிகள் பற்றிய குறிப்பு காணப்படுகின்றது. சில கருவிகள் வாய்ப்பாட்டிற்கு பக்க கருவிகளாக உபயோகப்பட்டவை. சில கருவிகள் தனியாக வாசிக்கப்பட்டவை. சில நாடகத்திற்கும் நாட்டியத்திற்கும் பக்க கருவிகளாக உபயோகிக்கப்பட்டவை. அரங்காற்றுக் காதையில் குழலாசிரியரின் சிறப்பு, வாசிக்கும் முறை பற்றியும், விரிவாகக் கூறப்பட்டுள்ளது.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

***யாழ் மற்றும் அதன் வகைகள்***

பலவகையான யாழ்கள் வழக்கத்தில் இருந்து வந்தன. யாழ் எனப்படும் நரம்புக்கருவி பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டு யாழ் என நான்கு வகைப்படும். பேரியாழுக்கு 21 நரம்புகளும், மகரயாழுக்கு 19, சகோடயாழுக்கு 14, செங்கோட்டு யாழுக்கு 7 நரம்புகளும் கூறப்பட்டுள்ளன. வேனிற் காதையில் யாழின் உறுப்புகள் பற்றி கூறப்பட்டுள்ளது.

***தண்ணுமைக் கருவிகள்***

முப்பது வகையான முழவுகள் பற்றி குறிப்பிடப்படுகின்றது. அகமுழவு, புறமுழவு, அகப்புறமுழவு என்று பலவகையான முழவுகள் அவை வாசிக்கப்படும் இடத்தைப் பொறுத்து கூறப்படுகின்றது.

முரசு என்பது முழவில் முக்கியமானதாகும். இது வார்முரசு, தியாகமுரசு, தீர்ப்பு அறிவிக்கும் முரசு என்று மூன்று வகைப்படும்.

***சிலப்பதிகாரத்தில் உள்ள இசை உருவகைகள்***

சிலப்பதிகார ஆசிரியரே இந்தக் காப்பியத்தை உரையிடையிட்டபாட்டுடை செய்யுள் எனக் குறிப்பிடுகிறார். அதாவது உரைநடை அமைப்பும், பாட்டும் கலந்து வருவது என்று பொருள்படும். இதன் படியே இதில் உரு, வரி, பாடல், பாட்டு போன்றவை காணப்படுகின்றன. மங்கலவாழ்த்துப் பாடல் என்ற காதை தான் இந்த காப்பியத்தின் முதல் காதையாகும். இதில் நிலவு, கதிரவன், மழை போன்ற இயற்கை போற்றப்படுகின்றன. இவற்றைத்தவிர வேட்டுவவரி, குன்றக்குரவை, வாழ்த்துக் காதை ஆகிய காதைகளிலும் இசை உரு வகைகள் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளது.

***இசை தொடர்பான கலைச்சொற்கள்***

ஆசான்- 103 பண்ணில் ஒன்று
ஆலத்தி- கற்பனை இசை
சாரீரவீணை- பாடும் குரல்
இணை- ஸ்தாயி உறவு
கானல்வரி- கடல், கடற்கரை பற்றிய பாடல்

***முடிவுரை***

சிலப்பதிகார நூல் 2000 ஆண்டுகள் பழமையானதாகக் காணப்பட்ட போதிலும் அதற்கு முந்திய 1000 ஆண்டு இந்திய இசை அமைப்பையும் வளர்ச்சியையும் வரலாற்றையும் சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது. இதனால் தொன்மையான புதுமையான இந்திய இசையிலக்கிய கருவூலங்களுள் தலையாயது இந்த சிலப்பதிகார நூலில் காணப்படும் இசைச் செய்திகள் ஆகும்.

ஸ்வர இலக்கணம், பண் இலக்கணம், ஆளத்தி இலக்கணம், தாள அடிப்படை இலக்கணம், கொட்டுமுழக்கு முறை இலக்கணம், இசைக்கருவி வகை இலக்கணம் முதலிய பல்வேறு இசையிலக்கணங்கள் விளங்கிய மிகப் பழமையான இசைச் சுரங்கமாக சிலப்பதிகாரம் விளங்குகின்றது. இவ்வாறு சிலப்பதிகாரம் கூறும் இசை பற்றி இவ் ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***துணைநூற்பட்டியல்***

1. அருணாசலம்.மு, “தமிழிசை இலக்கிய வரலாறு”, கடவு பதிப்பகம், மதுரை, 2009

2. அங்கயற்கண்ணி.இ, “சிலப்பதிகாரத்தில் காணப்படும் இசைப்பாடல்கள்”, அழகு அச்சகம், தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1994

3. மீரா.வி, “கர்நாடக சங்கீதம் ஓர் அறிமுகம்”, குமரன் புத்தக இல்லம், கொழும்பு , 2013